அமெரிக்க ராஜாங்க அமைச்சு
அதிகாரப்பூர்வ பேச்சாளரின் அலுவலகம்

உடனடி வெளியீட்டுக்காக நவம்பர் 6, 2017

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் துணைச் செயலர் தோமஸ் ஷெனன் – இலங்கை வெளியுறவுச் செயலர் பிரசாத் காரியவசம் ஆகியோரின் கூட்டு ஊடகச் சந்திப்பு. கொழும்பு, இலங்கை

துணைச் செயலர் ஷெனன்: நன்று, மிக்க நன்றி வெளியுறவுச் செயலர் அவர்களே. இன்று கொழும்பில் உங்கள் அருகில் நிற்பது எவ்வளவு பெரிய மகிழ்ச்சி. தாங்கள் கூறியதுபோல, வாஷிங்டனில் நீங்கள் இலங்கைத் தூதராக இருந்தபோது-அதுவும் இலங்கை பாரிய மாற்றங்களை எதிர்கொண்ட வேளையிலும், அமெரிக்க-இலங்கை உறவுகள் முன்னேறியபோதும் நாம் இருவரும் இணைந்து பணியாற்றியுள்ளோம். மேம்பட்ட இந்த உறவு முன்னெடுக்கப்பட்டதில் உங்களுக்குப் பெரும்பங்குள்ளது. அமெரிக்க மக்கள், அமெரிக்க நாடாளுமன்றம் மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு நீங்கள் நம் உறவுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்துள்ளீர்கள். நீங்கள் மிகவும் சிறந்த இராஜதந்திரி, அவ்வகையில் உங்கள் திறமையை உங்கள் அரசு இனங்கண்டு வெளியுறவுச் செயலராக்கியுள்ளது. அவ்வகையில் இலங்கையின் இராஜதந்திர நடவடிக்கைகளை, நமது இருதரப்பு உறவுகளுக்கு அப்பாற்பட்டுச் சர்வதேச அளவில் கொண்டுசெல்வதில் நீங்கள் முக்கிய பங்காற்றி வருகிறீர்கள்.

கொழும்பில் நடைபெறும் அமெரிக்க-இலங்கை கூட்டுறவுப் பேச்சுவார்த்தைக்காக நான் இங்கு வந்துள்ளது மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது. அவ்வகையில் நாம் இரண்டாவது முறையாக இப்படியானதொரு சந்திப்பில் பங்குபற்றியுள்ளோம். வெளியுறவுச் செயலர் கூறியதுபோல நாம் இணைந்து செயல்படும் பல முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. இலங்கையில் இன, மத வித்தியாசம் இன்றி, அனைவருக்கும் மேலும் சமத்துவத்தையும் வளர்ச்சியையும் அளிக்க முன்னெடுக்கப்பட்டுவரும் சீர்திருத்தங்களை நான் பாராட்டுகிறேன். இணக்கப்பாடுள்ள இலங்கையைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் அமெரிக்கா தமது முழு ஆதரவைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாட்டுக்குப் புதிய அரசியல் யாப்பு, போருக்குப் பின்னரான நீதி, சகவாழ்வு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவை முன்னெடுக்கப்படுவதையும் அமெரிக்கா பாராட்டுகிறது. இந்த விடயங்களில் அரசு முன்னேற்றங்களைச் செய்யசெய்ய எமது இருதரப்பு உறவுகளும் தொடர்ந்து வளர்ச்சியடையும். இலங்கை அதிகாரிகள், மற்றும் வெளியுறவுச் செயலருடன் இன்று நான் நடாத்தியக் கூட்டங்களில்-அவர் கூறியதுபோல- இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் பாதுகாப்பு, நிலைத்திருக்கக்கூடிய கட்டமைப்பு மேம்பாடுகளை முன்னெடுப்பது, சர்வதேச அமைதிக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் வடகொரியாவின் சட்டவிரோதமான ஆயுதத் திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்களை விவாதித்தேன்.

மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை வளர்ப்பது போன்ற அம்சங்களில், ஜனநாயக நாடுகள் எனும் வகையில் அமெரிக்காவும் இலங்கையும் சில பொது செயல்திட்டங்களைக் கொண்டுள்ளன. உறுதியான பங்காளிகள் என்பதற்கு அப்பாற்பட்டு,

இன்று எமது உறவுகள் இதுவரை இல்லாதவகையில் உச்சத்தை எட்டியுள்ளன. இந்தியப் பசுபிக் பகுதியில், அனைத்து நாடுகளும் பலனடையும் வகையிலும்,சர்வதேசச் சட்டங்கள், பாதுகாப்பு, நடைமுறைகள் ஆகியவற்றைப் பாதுகாத்து இறையாண்மை பேணப்படும் வகையில், வெளிப்படையான, காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க அமெரிக்காவும் இலங்கையும் உறுதிபூண்டுள்ளன.

இலங்கையில் ஆங்கிலம் கற்பிக்க அமெரிக்கத் தன்னார்வலர்களை மீண்டும் அனுப்புவது தொடரில், அமெரிக்க அமைதிகாக்கும் படையினர் இலங்கை அரசுடன் செயல்பட்டுக்கொண்டுள்ளனர் என்பதை நான் மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்கிறேன். ஆங்கிலத்தில் புலமை பெறுவதன் மூலம் பொருளாதார மற்றும் வேலை வாய்ப்புகள் மேலும் பெருகும் என்பதை நாம் அறிவோம். அதன் மூலம் உலகளாவிய பார்வையும் கிட்டும். அவ்வகையில்-இலங்கையிலுள்ள மக்களின் சமாதானத்தையும், ஸ்திரத்தன்மையையும் முன்னேற்ற இலங்கை எடுத்துவரும் நடவடிக்கையை அங்கீகரிக்கும் வகையில்- எம்மிடம் இருக்கும் மிகச்சிறந்த தகைமைகளையும், திறமைகளையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள நாங்கள் சித்தமாக இருக்கிறோம்.

அதுமாத்திரமின்றி, அமெரிக்க விவசாய அமைச்சின் மூலம் கூடுதலாக 21 மில்லியன் டொலர்கள் உதவித் திட்டத்தை அறிவிப்பதிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன். அது முன்னேற்றத்துக்கு உதவும் உணவுத் திட்டத்தின், கீழ் செயல்படுத்தப்படும். இலங்கையில் பால் உற்பத்தி அதிகரிக்க இந்தத் திட்டம் உதவும். அதன் மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகள் உள்ளூர் மற்றும் பிரதேச சந்தைகளுடன் தொடர்புகொள்ள வழிசெய்யும். அமெரிக்க நாடாளுமன்ற வழிமுறைகள் முடிவடைந்த பிறகு, இலங்கை கடற்படைக்கு அமெரிக்காவின் கடலோரக் காவல்படையின் அதிநவீன கப்பல் ஒன்றும் அளிக்கப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். செக்ரட்டரி கிளாஸ் வகையைச் சேர்ந்த இந்தக் கப்பல் வேகமாகப் பயணிக்கக் கூடியது. அதன் மூலம், இலங்கை தனது கடலோரங்களை மேலும் திறமையாகக் கண்காணிக்க முடியும். அதிலும் குறிப்பாகத் தமது தனித்துவமான பொருளாதரப் பகுதிகளைக் கண்காணித்து, தமது கடலோரப் பகுதிகளில் தொடர்பாடல்களை மேம்படுத்தவும் முடியும். இலங்கையின் கடலோரப் பாதுகாப்புக்கு, மேம்பட்ட கப்பல் ஒன்றை வழங்குவதற்கு அப்பாற்பட்டு, இந்த முன்னெடுப்பு வளர்ந்துவரும் எமது ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய ஒற்றுமைக்கான கூட்டு அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துகிறது.

அமெரிக்க-இலங்கை உறவுக்கு இன்று ஒரு சிறப்பான நாள். இலங்கை அரசு, நீதிவழிமுறைகள், பொறுப்புக்கூறல், இணக்கப்பாடு மற்றும் மனித உரிமைகள் விடயங்களை, மேலும் முன்னெடுக்க சீர்த்திருத்தங்களைச் செய்துவரும் சூழலில், சிறப்பான இந்நாட்டில் பொருளாதர வளர்ச்சியுடன் அனைவருக்கும் சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் கிடைக்க அமெரிக்கா தொடர்ந்து ஒத்துழைப்பு அளித்துவரும். வெளியுறவுச் செயலர் அவர்களே, உங்களுடைய நட்பு, இன்று எனக்கு அளிக்கப்பட்ட உபசாரங்கள், இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற நீங்கள் எடுத்த பாரிய முயற்சியும் அதை வெற்றியடையச் செய்யவும், நமது ஒத்துழைப்பு மேலோங்கவும் உங்களது செயல்பாடு ஆகியவற்றுக்கு நன்றி கூறி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

# # #